# தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
# (29.06.2016 முதல் 03.07.2016)

**அறிக்கைஎண் :052/2016** **தேதி:28.06.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 27°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் பரவலான மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை:திருப்பூர் (29.06.2016 முதல் 03.07.2016)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் வாரத்தில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 82 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 59 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 29.06.16 | 1 | 32 | 23 | 6 | 82 | 59 | 15 | தென் மேற்கு |
| 30.06.16 | 0.5 | 32 | 23 | 6 | 82 | 59 | 15 | தென் மேற்கு |
| 01.07.16 | 0 | 32 | 23 | 6 | 82 | 59 | 15 | தென் மேற்கு |
| 02.07.16 | 0 | 32 | 23 | 6 | 82 | 59 | 15 | தென் மேற்கு |
| 03.07.16 | 0.5 | 32 | 23 | 6 | 82 | 59 | 15 | தென் மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி பொள்ளாச்சி தாலுக்காவில் உள்ள 40 நாட்களான நிலக்கடலைக்கு ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினால் பயன்படுத்தி கார் பருவ நெல் நாற்றாங்கால் நெல் நாற்றுக்களுக்கு ஏற்படும் பாதிப்பை தவிர்க்க போதுமான வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் நாட்களில் மழையுடன், அதிக காற்றின் வேகம் எதிர்பார்க்கப்படுவதால், ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள கரும்பு மற்றும் வாழைக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி 30 மற்றும் 60 நாட்களுக்கு மேலான மஞ்சளுக்கு ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 72 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினால் பயன்படுத்தி கார் பருவ நெல் நாற்றாங்கால் நெல் நாற்றுக்களுக்கு ஏற்படும் பாதிப்பை தவிர்க்க போதுமான வடிகால் வசதி செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**